**PRE BOARD EXAMINATION, JANUARY -2020**

**SECOND LANGUAGE TAMIL**

**CLASS: X** **MAX.MARKS: 80**

**DATE: 14/ 01 / 2020** **TIME: 3 HOURS.**

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு ; அ | படித்தல் | - 15 | மதிப்பெண்கள் |
| பிரிவு ; ஆ | எழுதுதல் | - 14 | மதிப்பெண்கள் |
| பிரிவு ; இ | இலக்கணம் | -15 | மதிப்பெண்கள் |
| பிரிவு ; ஈ | இலக்கியம் /தமிழ் பீட் நூல் | - 36 | மதிப்பெண்கள் |

*** அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்***

**பிரிவு ; அ படித்தல் 15 மதிப்பெண்கள்**

**1) கீழ் வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதுக (5)**

சங்ககாலத்தில் ஒரு முல்லைக்கொடியின் துயர் நீக்க பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப் போல வள்ளலார், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பயிர்வாடத் தான் வாடினார் வீடுதோறும் இரந்தும் பசியாறாது அயர்ந்தவரையும், நீடியபணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி மதவேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல் இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

**வினாக்கள்**

1.ஒரு முல்லைக்கொடியின் துயர் நீக்க தன் தேரையே ஈந்தவர் யார்?

அ) பாரிவள்ளல் ஆ)கரிகாலன் இ)அதியமான்

2.வள்ளலார் எவ்விடத்தில் சத்திய தருமச்சாலையை நிறுவினார்?

அ) மதுரையில் ஆ) சிதம்பரத்தில் இ)வடலூரில்

3) வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் எனக் கூறியவர்

அ) பாரிவள்ளல்   ஆ) வள்ளலார்   இ) அதியமான்

4) சத்திய தருமசாலை இன்னும் எதனை போக்குகிறது?

அ) கடனை   ஆ) உடல்பிணியை   இ) பசிப்பிணியை

5) வள்ளலார் ஏழைகளாய் ________ கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தர்.

அ) நெஞ்சு இளைத்தோரைக் ஆ) சிறுதொழில் செய்பவரை இ)தொழில் செய்பவரை

**2) கீழ் வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதுக (5)**

ஒரு நாள் இங்கிலாந்து நாட்டில் ரபீந்ரநாத் தாகூர் ஓர் ஏழை மனிதன் தெருஓரமாக நின்று கொண்டிருப்பதை பார்த்தார். அவன் அணிந்திருந்த காலணிகள் கிழிந்து வெளியில் விரல்கள் தெரிந்து கொண்டிருந்தன. அந்த கால கட்டத்தில் பிச்சை எடுப்பது தடை செய்யப் பட்டிருந்தது. அதனால் அம்மனிதர் எதுவும் பேசாமல் தாகூரையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். தாகூர் அம்மனிதன் மேல் பரிதாபப் பட்டு ஒரு தங்க நாணயத்தை அவனிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார். அவனோ தாகூர் தவறுதலாகத்தான் நாணயத்தைக் கொடுத்துவிட்டு சென்றார் என்று ஏழை மனிதன் நினைத்துக் கொண்டு, அவர் கொடுத்த தங்க நாணயத்தை அவரிடமே கொடுத்துவிட்டு சென்றார். இதனை சற்றும் எதிர்பாராத தாகூர் அம்மனிதனின் நேர்மையைக் கண்டு வியந்தார்.

**விடையளி**

1) இரபீந்ரநாத் தாகூர் எந்நாட்டிற்குச் சென்றார் ?

அ) போலந்து   ஆ) இங்கிலாந்து   இ) பின்லாந்து

2) இங்கிலாந்தில் எது தடை செய்யப்பட்டிருந்தது?

அ) பணம் கொடுப்பது   ஆ)பிச்சை எடுப்பது   இ)சோறு கொடுப்பது

3) ஏழையின் எச்செயலைக் கண்டு வியந்தார் தாகூர் ?

அ) நிதானத்தை   ஆ) வைராக்கியத்தை   இ) நேர்மையை

4) தாகூர் அம்மனிதனிக்கு என்ன கொடுத்தார்?

அ) வெள்ளி நாணயத்தை   ஆ) நாணயத்தை   இ) தங்க நாணயத்தை

5) தாகூர் யாரைத் தெருவோரமாகப் பார்த்தார் ?

அ) ஒரு மனிதனை ஆ) ஓர் பெண்ணை இ ) ஓர் ஏழை மனிதனை

**3) கீழ் வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக (5)**

சிந்தனை எண்ணங்கள் ஆகவும் எண்ணங்கள் பேச்சாகவும் வெளிப்படுகிறது. தனது உள்ளத்தில் இருப்பதை பேச்சின் மூலமும், எழுத்தின் மூலமும், தாய் மொழியின் மூலமே ஒருவனால் வெளிப்படுத்த முடியும். பலமொழிகளை ஒருவர் பயின்றிருந்தாலும் அவரது அடி மனதில் வேரூன்றி இருப்பது அவரது தாய் மொழியே ஆகும். இதனால் தான் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் தமிழ் மகன் காலில் முள் தைத்து விட்டால் அம்மா என்று அலறுகிறான். சிறந்த அறிவாளிகள் எழுத்தாளர்கள் அறிஞர்கள் பலரும் தனது தாய் மொழியிலேயே தனது கருத்துக்களை வெளியிட்டு சிறப்பு பெற்றுள்ளனர். இதனால்தான் தொடக்கப் பள்ளிகளில் தாய்மொழி வழிக் கல்வி வலியுறுத்தப் பட்டு வருகிறது.

**பிரிவு : ஆ எழுதுதல் 14 மதிப்பெண்கள்**

**4)** நீ வாழும் பகுதியில் அஞ்சல் பெட்டி அமைத்துத்தர அஞ்சலக தலைமை மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம் எழுதுக. **(6)**

**( அல்லது)**

உடல் சீராக விளங்க உணவுப்பழக்கமும் உடற்பயிற்சிகளும் தேவை என்பதை உன் நண்பனுக்கு எடுத்துக் கூறும் கடிதம் எழுதுக.

*[ உமது முகவரி :அரவிந்த் /அனிதா 11, சிதம்பரனார்தெரு சென்னை - 19. எனக் கொள்க ]

**5) ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புக்களைக் கொண்டு கட்டுரை எழுதுக .(8)**

அ) முன்னுரை - ஒற்றுமையின் வலிமை - முன்னேறிய நாடுகள் - நம் நாட்டின் விடுதலை - வெற்றி வாய்ப்புகள் -ஒன்றுபட்டல் உண்டு வாழ்வு - முடிவுரை

ஆ) முன்னுரை- கல்வியும் கல்விக் கூடங்களும் - வள்ளல்களை வளர்த்த அக்காலக் கல்வி - வணிகப் பொருள் ஆகிவிட்ட இக்காலக் கல்வி - வருங்கால மக்களின் கல்வி நிலை -அரசின் கடமையும் மக்களின் விழிப்புணர்வும் - முடிவுரை.

இ) முன்னுரை -சுற்றுச் சூழல் சுகாதாரம் - தனி மனித சுத்தம் - வீடுதூய்மையானால் நாடும் தூய்மையாகும் - நோய் வராமல் தடுக்க மாசு நீக்குவோம் – முடிவுரை.

**பிரிவு ; இ, இலக்கணம் -15 மதிப்பெண்கள்**

**6) சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ) (3)**

1) விளித்தொடர்

அ) கையால் எழுது ஆ) பேனாவால் எழுது இ) நண்பா எழுது

2) எதிர்மறை தொழிற்பெயர்

அ) நடத்தல் ஆ) நாட இ) நடவாமை

3) வினைத்தொகை

அ) அலைகடல் ஆ) தேன்மொழி இ) காய்கனி

4)உரிச்சொல் தொடர்

அ) மிகக் காவல் ஆ) காவல் இ) கடி காவல்

5) தேமா

அ) எல்லாம் ஆ) செல்வரை இ) எல்லாரும்

**7) நிரப்புக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ) (3)**

1) பாலை நிலம் என்பது _________

ஆ) வயலும் வயல் சார்ந்த இடமும் அ) கடலும் கடல் சார்ந்த இடமும்

இ) மணலும் மணல் சார்ந்த இடமும்

2) ஆசிரியப்பாவின் ஓசை_______

அ) துள்ளலோசை ஆ) அகவலோசை இ) செப்பலோசை

3) மருதம் நிலத்திற்குரிய தெய்வம் _____________

அ) முருகன் ஆ) இந்திரன் இ) திருமால்

4) பகையரசனால் முற்றுகை இடப்பட்ட தம்மதிலைக் காப்பது __________

அ) காஞ்சித் திணை ஆ) நொச்சித்திணை இ)வெட்சித் திணை

5) தீவகம் என்ற சொல்லுக்கு ______________என்பது பொருள்

அ) அணி ஆ) பொருத்தம் இ) விளக்கு

**8) கூறியவாறு செய்க. (மூன்றனுக்கு மட்டும் ) (3)**

1) கற்றபின் (அசை பிரித்து வாய்ப்பாடு எழுதுக )

அ) நிரை நேர் - புளிமா ஆ) நேர் - நிரை - கூவிளம் இ)நிரை நிரை – கருவிளம்

2) மரம் அறுத்தான் (சரியான வேற்றுமையை எழுதுக )

அ) ஆல் ஆ) ஆன் இ) ஐ

3) கண்ணீர் (நிலை மொழியை எழுதுக )

அ) க ஆ) நீர் இ) கண்

4) மலர்ப்பாதம் ( உருவகமாக மாற்று )

அ) பாதமலர் ஆ) மலர் போன்ற பாதம் இ) பாதம் போன்ற மலர்

5) செம்மை + ஆம்பல் ( சேர்த்து எழுதுக )

அ) செவாம்பல் ஆ) சேதாம்பல் இ) சொதாம்பல்

**9) இலக்கணக் குறிப்புத் தருக. (மூன்றனுக்கு மட்டும் ) (3)**

1) முத்துப்பல்

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) அன்மொழித்தொகை

2) முதல்வர் நாளை வருகிறார்

அ) காலவழுவமைதி ஆ) வழுவமைதி இ) வாழா

3) நெடும் புனலுள் வெல்லும் முதலை ஆடும்புனலுள்

நீங்கின் அதனை பிற ( ஈற்றுசீர் பெறும் வாய்ப்பாடு)

அ) நாள் ஆ) பிறப்பு இ) மலர்

4) காடும் காடு சார்ந்த இடமும்

அ) மருதம் ஆ) முல்லை இ) பாலை

5) தெய்வம், மக்கள், விலங்கு ஆகியன

அ) உரிப்பொருள் ஆ) கருப்பொருள் இ) முதற்பொருள்

**10) சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க ( மூன்றனுக்கு மட்டும் ) (3)**

1) அ) மாலை 6 முதல் 10 மணி வரை இரவு

ஆ) மாலை 6 முதல் 10 மணி வரை மாலை

இ) மாலை 6 முதல் 10 மணி வரை யாமம்

2) அ)செய்யுளில் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது யாப்பிலக்கணம்

ஆ)செய்யுளில் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது அணி இலக்கணம்

இ)செய்யுளில் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது சொல் இலக்கணம்

3) அ)சொல்லோ உருபோ மறைந்து வருவது தொகை நிலைத்தொடர்

ஆ)சொல்லோ உருபோ மறைந்து வருவதுதொகாநிலைத்தொடர்

இ)சொல்லோ உருபோ மறைந்து வருவதுதொடர்

4) அ) ஆநிரைகளை மீட்பது காஞ்சித் திணை

ஆ) ஆநிரைகளை மீட்பது கரந்தைத் திணை.

இ) ஆநிரைகளை மீட்பது வஞ்சித் திணை

5) அ) ஒரு ஆண்டின் ஆறு கூறுகள் பெரும்பொழுது

ஆ) ஒரு ஆண்டின் ஆறு கூறுகள் சிறுபொழுது

இ) ஒரு ஆண்டின் ஆறு கூறுகள் பொழுதுகள்.

## பிரிவு : ஈ ( இலக்கியம் /தமிழ் பாட நூல்)

**11) கீழ் வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைகளை எழுதுக. (5)**

வாய்மையை சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா, என்ற கருத்தை ' பொய்யா செந்நா' 'பொய் பாடு பரியா வயங்கு செந்நா' என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஒரு அதிசய திறவுகோல் என்பார்கள், இன்பத்தின் கதவை திறப்பதுவும் அதுதான் துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அது தான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது. பொய் சொல்லக் கூடாது என பலப் பாடல்களில்

வற்புறுத்தப் பட்டுள்ளது. வாய்மையை பற்றி சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தை புலப்படுத்துகின்றன. தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறியும் அறம் இரண்டாம்தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமான ஆறம் எனலாம்.

**வினாக்கள்**

1, எது உண்மையான நா?

2, இரண்டாம்தரமான அறம் எது ?

3.அதிசய திறவு கோல் எது?

4. எதுமனிதனை தாழ்த்துகிறது?

5 .வாய்மையை சிறந்த அறமாககூறுவது எது?

**12) கீழ் வரும் பாடல் அடிகளைப் படித்து வினாக்களுக்கு விடைகளை எழுதுக. (4)**

விரிந்தன கொம்பில் கொய்த
        வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
        இரும்புழைப் புண்போல நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
        பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
        தடவிலா தனித்தேன் அந்தோ

**விடையளி**

1) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

அ) தேவாரம் ஆ) தேம்பாவணி இ) சீறாபுராணம்

2) 'தேம்ப' என்னும் சொல்லின் பொருள்.

அ) வாட ஆ) நினைக்க இ) தேட

3) 'வீயென' - சொல்லை பிரித்து எழுதுக

அ) வீ + இன ஆ) வீ + யென இ) வீ + என

4) இப்பாடலின் ஆசிரியர்

அ) இளங்கோவடிகள் ஆ) வீரமாமுனிவர் இ) கம்பர்

**13) நிரப்புக (2)**

அ) குற்றம் -------------- குடிசெய்து வாழ்வானைச்

சுற்றமாச் --------------- உலகு

ஆ) எப்பொருள் எத்தன்மைத் ---------------- அப்பொருள்

மெய்ப்பொருள் ------------ தறிவு

**14) எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி (8)**

அ) காலக்கணிதம் பாடல் வழியாக கண்ணதாசன் கூறுவனவற்றை எழுதுக.

ஆ)குலசேகர ஆழ்வார் வித்துவான் கோட்டம்மா என அழைத்துக் கூறுவன யாவை?

இ) கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் கூறிய கவிதாஞ்சலியை விவரி

ஈ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக

**15) எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி (10)**

அ) தமிழ் சொல் வளம் சொல்லாக்கத்திக்கான தேவை குறித்து உரைக் குறிப்பு எழுதுக

ஆ) இன்றய கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்ற சிந்தனை குறித்து எழதுக.

இ) 'தலையை கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம்சுட்டிப் பொருள் விளக்குக .

ஈ) கரகாட்டம் , மாயிலாடம் குறித்து எழுதுக .

உ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறம் இன்றைக்கும் தேவையானதா சான்று தருக,

**16) எவையேனும் ஒரு துணைப்பாட வினாவுக்கு விடையளி. (7)**

அ) அழகிரி சாமியின் ஒருவன் இருக்கிறான் கதை கூறும் செய்திகளை எழுதுக.

ஆ) விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை.

இ) புதிய நம்பிக்கை.

*******************************************************************************